1982 மார்ச் 22]

குடிநீர் வடிகால் வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட வகை (Ca egory) முறை.

*வினா எண் 595—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குடிநீர் வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட (Category) முறையானது அல்ல என்பதை அரசு அறியுமா ?

(ஆ) அவற்றை மாற்றி முறையாக தெரிந்தெடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) விஞ்ஞான ரீதியான ஆய்விற்குப் பின்னரே குடியிருப்புகளின் வகைகள் பிரிக்கப்பட்டுள்ளன. எனினும் மாவட்டங்களிலுள்ள குடியிருப்புகள் வகையில் மாற்றம் அவசியம் ஏற்பட்டால் அங்குள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்களைக் கலந்தாலோசித்து மாற்றிக் கொள்ளலாமென்று மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : இந்த காட்டிகரியாக பிரிக்கப்பட்ட இடங்கள் குறித்து ஏற்கனவே ஒரு லிஸ்ட் கொடுத்து அதன் அடிப்படையில் எது எது வரும் என்று பிரசுரிக்கப்பட்டுள்ளதால், நல்ல குடிநீர் கிடைக்காத கிராமங்கள் சில 5 ஆவது, 6 ஆவது நம்பரில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுகுறித்து குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தொடர்ச்சியாக ஆட்சேபனை மனுக்கள் வந்திருப்பது அரசுக்கு தெரியுமா? ஆகவே அதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்து அந்தந்த தொகுதிகளிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் ஆலோசனையுடன் அந்த கிராமங்களை எந்தெந்த காட்டிகரியில் கொண்டுவரலாம் என்பது பற்றி பரிசீலிக்க விசேஷ ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : உறுப்பினர்களின் ஆலோசனையைப் பெறமுடியாது முறையீடுகள்தான் பெற முடியும். உறுப்பினர்கள் அதில் டெக்னிக்கல் எக்ஸ்பர்ட்ஸ் அல்ல. அவர்கள் கொடுக்கும் முறையீடுகளை வாரியப் பொறியாளர்களை கலந்தாலோசித்து அந்தக் குடியிருப்புகளை மாற்றிக் கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஏதாவது ஊர்கள் விட்டுப்போய்விட்டன என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்வார்களானால் அதைப் பரிசீலனை செய்து பட்டியலில் சேர்த்துக் கொள்ளக்கூடிய அதிகாரம் மாவட்ட ஆட்சியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

1982 மார்ச் 28

திரு. தி. அன்பழகன் : இந்த காட்டிகரி முறையைப் பயன் படுத்துவதால் நீண்ட காலதாமதமாகிறது. ஆகவே வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக ஏற்படுகிறது. எனவே இந்தமுறையை நீக்கி கிராமப்பகுதிகளுக்கு முன் உரிமை தந்து இத்திட்டத்தைச்செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்த காட்டிகரி முறை என்பது பெரிய அதிசயமானதல்ல. எந்தெந்தக் கிராமங் கள் எந்த எந்த வகையில் வருகிறது. தண்ணீர் எங்கே கிடைக் கிறது. எவ்வளவு காலத்திற்கு இருக்கிறது. எவ்வளவு தூரத்தில் இருக்கிறது. யாருக்குச் சொந்தமானது என்பது பற்றி பிரித்து செய்வது, எனவே அதை அடிப்படையாக வைத்து இதைச் செய்து வருகிறோம். திரு. சொரணம் அவர்கள் சொன்னது போல் சங்கடங்கள் ஏதாவது இருந்தால், அதைப்பற்றி முறை யிட்டால் அதைப்பற்றி பரிசீலனை செய்து ஆவன செய்ய இந்த அரசு எப்போதும் தயாராகயிருக்கிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : இந்த காட்டிகரி முறையில் பிரிக்கப் பட்டிருந்தும் குடிநீர் இருக்கிறது. ஆனால் அது குடிக்க முடியாத அளவிற்கு பயனற்றதாக இருக்கிறது என்று சம்பந்தப்பட்ட‘ ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு விண்ணப்பித்தால் அதன் அடிப் படையில் ஏதாவது மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : யார் விண்ணப் பித்தாலும் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளோடு கலந்தா லோசித்து மாற்றலாம் என்று மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சின்னசாமி : தன்னிறைவுத் திட்டம் வருகிற ஒன்றியங்களில் ஆவது அதைப் பொறுத்தமட்டில் உடனடியாகச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மூன்று வகை வரைதான் இப்பொழுது செய்வதாக திட்டமிட்டு வேலை செய்து வந்தோம். தன்னிறைவுத் திட்டத்தின் ஐந்தாவது வகை வரை சேர்த்துக் கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : அமைச்சர் அவர்கள் கலெக்டர் அவர்களிடம் சொல்லிச் செய்யலாம் என்று சொன் னார்கள். குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில் விளாம் பாக்கத்தில் தண்ணீர் கிடைக்கவில்லை என்று கலெக்டர் சொன் னதற்குப் பிறகும் கூட குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் கவனிக்காமல் நேற்று உண்ணாவிரதம் இருக்கக் கூடிய அளவிற்கு கலெக்டர் ஆபீஸ் முன் சென்றிருக்கிறார்கள். எனவே அரசு

1982 மார்ச் 22]

வருங்காலத்திலாவது இப்படி கவனிக்கப்படாத இடங்களை உடனடியாகக் கவனிக்க ஆவன செய்யப்படுமா? பலயிடங்களில் ஆதி திராவிடர் குடியிருக்கக்கூடிய இடங்களில் இப்படிப்பட்ட நிலை இருக்கும் இடங்களில் அதைப்போக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, கலெக்டர் அதைச் செய்வார் என்று நான் சொல்லவில்லை. நான் சொன்னதை மீண்டும் படிக்கிறேன்.. குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர் அவர்களிடம் கலந்தாலோசித்து, 'தே ஆர் டெக்னிகல் எக்ஸ்பர்ட்ஸ்', அந்தக் குடியிருப்புகளை மாற்றிக் கொள்ளும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, முதல் பிரிவை எடுத்துக் கொள்வோம். குடியிருப்புகளுக்கு நீர் மூலங்கள் இல்லாத குடியிருப்புகள். இரண்டாவது, குடிக்கத் தகுதியற்ற நீர் மூலங்கள் இருக்கக் கூடிய குடியிருப்புகள். ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் இதற்கு தண்ணீர் கிடைக்கக்கூடிய தகுதி உள்ளதா, இல்லையா என்பதைப் பற்றி பரிசீலனை செய்ய அவரும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் கலந்தாலோசித்து முடிவெடுப்பார்கள். இதிலே சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். தங்களிடம் மக்கள் சொல்வதையும் சொல்லலாம். ஆனால், அதற்கான முடிவுகளை இவர்கள் இருவரும் சேர்ந்து எடுப்பார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சுகாதாரப் பணிகள்.

*வினா எண் 596—திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசை மாற்று வாரியப் பகுதிகளில் சுகாதாரப் பணிகளுக்காக உலக வங்கியிடமிருந்து கடன் பெறப்படுகிறதா?

(ஆ) அந்தக் கடனுக்கு செலுத்தப்படும் வட்டி விகிதம் என்ன?

(இ) கடன் வழங்கும் உலக வங்கி விதித்துள்ள வேறு நிபந்தனைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) ஆம். உலக வங்கியின் நிதி உதவி பெரும்பாலும் வட்டி இல்லாக் கடனாக அளிக்கப்படுகிறது. அந்தக் கடன் உதவிக்கு அவர்கள் நிர்வாகச் செலவிற்காக 3/4 சதவீதம் மத்திய அரசிடமிருந்து